सत्यमेव जयते

# இந்தியத் துணைத்தூதரகம்
## யாழ்ப்பாணம்

**ஊடக அறிக்கை**

கயானா குடியரசுக்கான உயர் ஸ்தானிகராக நியமனம் பெற்றுச் செல்லும் இந்தியத் துணைத்தூதுவர் திரு. வெ. மகாலிங்கம் அவர்கள் 19 மே 2014 அன்று துணைத் தூதரக வளாகத்தில் வடமாகாணத்தின் பத்திரிகை மற்றும் காணொலி ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணத்தில் இந்தியத்துணைத் தூதுவராக தான் கடமையாற்றிய மூன்றரை வருட காலத்தில் துணைத்தூதரகத்தின் செயற்பாடுகளின் சாராம்சத்தை ஊடகத்தினருக்கான அறிமுகவுரையில் எடுத்தியம்பினார். 22 மே 2014 அன்று தனது சேவையை முடித்து யாழ்ப்பாணத்தை விட்டு செல்லும் முன்னர் தான் இறுதியாக ஆற்றும் உரை இதுவெனத் தெரிவித்தார்.

தனது உரையில் இந்திய அரசின் உதவித்திட்டமான அபிவிருத்திப் பங்காளித்துவ முன்னெடுப்புகளில் ஒன்றாக உள்ளக இடப்பெயர்வுக்குள்ளானோருக்கான ‘இந்திய வீட்டுத்திட்டம்’ திட்டமிட்டபடி நன்கு முன்னேற்றமடைவதாக தெரிவித்தார். வடக்கு கிழக்கில் 2015 இற்கு முன்னர் வழங்கப்படவென அடையாளப்படுத்தப்பட்ட 43000 வீடுகளில், வடக்கு மாகாணத்தில் 26,931 பயனாளிகள் இந்திய வீட்டுத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவற்றில் 12,277 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இவை 2014 மே 1ஆம் நாளன்று கையளிக்கப்பட்ட இந்திய வீட்டுத்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினுடைய முன்னோடித் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட 1000 வீடுகளையும் உள்ளடக்கும். வருகின்ற மாதங்களில் பல கட்டங்களிலுள்ள 14,654 வீடுகள் கையளிக்கப்படவுள்ளன.

இரண்டாம் கட்டத்தின் கீழ் வீடுகள் ஒதுக்கப்பட்ட பயனாளிகள் திட்டத்தின் காரணமாக கடனாளிகளாக்கப்படுவது பற்றிய ஊடகங்கங்களின் அறிக்கைகளை நினைவுகூர்ந்தார். இதனைத்தெளிவுபடுத்துகையில், சகல தேவைகளையும் பூர்த்திசெய்யக்கூடிய 550 சதுர அடி பரப்பளவுள்ள வீட்டைக் கட்டுவதற்கென 550,000 இலங்கை ரூபா இந்திய வீட்டுத்திட்டத்தின்கீழ்

நேரடியாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது எனத்தெரிவித்தார். எனினும் 25931 வீடுகளில் (முன்னோடித்திட்டத்தின் 1000 வீடுகள் நீங்கலாக) 13785 வீடுகள் அதாவது 51சதவீதமானவை பயனாளிகளால் 550 சதுர அடிக்கு மேற்பட்டவையாகக் கட்டப்பட்டுள்ளமையை துணைத்தூதரகம் அவதானித்துள்ளது. மேலும் பயனாளிகள் தமது செலவில் நிலத்தகடுகள் பதித்தும், உருக்கினாலான சமையலறைத் தொட்டிகளை பொருத்தியும் செதுக்கப்பட்ட ஆடம்பர மரக் கதவுகளைப் பொருத்தியுமுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தின் வட்டக்கச்சி பகுதியில் இத்திட்டத்தின் செயற்படுத்தற் பங்காளிகள் வீடுகளை 550 சதுர அடி அளவில் 550,000 இலங்கை ரூபா பெறுமதிக்குள்ளான விலைக்குரிய பெறுமதியோடு கட்டிமுடித்துள்ளனர். எனவே இந்திய வீட்டுத்திட்டப் பயனாளிகள் கடனாளிகளாக்கப்படுகின்றனர் என்ற முடிவுக்கு வருவது பொருத்தமற்றதாக அமையும்.

துணைத்தூதுவர் அவர்கள் ஊடகங்களால் துணைத்தூதரகத்தின் நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்ட ஆதரவுக்கு நன்றி தெரிவித்து செய்தியாளர் சந்திப்பை நிறைவு செய்தார்.

********